# திருமலைத்தீபம்

**Thirumalaitheepam**

தீபம் – 85 மார்கழி – 2023 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமாலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=




## ஆயரின் செய்தி

இயேசுவின் பெயரால் வாழ்த்துகள்!

டிசம்பர் மாதம் என்றாலே செயல்பாடுகள் நிறைந்த மாதமாகும். மரியன்னையின் அமலோற்பவப் பெருவிழா முதல் (மார்கழி 08) திருக்குடும்பப் பெருவிழா (மார்கழி 31), மரியா இறைவனின் தாய் பெருவிழா வரை (தை 01) மரியன்னையின் அழைப்பு, பணி, செயல்ப்பாடுகள், மனநிலை, உதவும் மனப்பாங்கு போன்றவற்றை அறியலாம். எல்லாவற்றிற்கும் உச்சமாக குழந்தை இயேசுவின் பிறப்பும் அதனுடன் இணைந்த சம்பவங்களும் அமைந்துள்ளன. "அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்...." (லூக் 1:10) என வானதூதர் இயேசுவின் பிறப்பை இடையர்களுக்கு

கலாநிதி. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
மறைமாவட்ட ஆயர்

→ 2

## செபிப்போம் வாழ்த்துவோம்



பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை
மார்கழி 09 பிறந்த நாள்,
மார்கழி 20 குருத்துவ நினைவு நாள்



பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை
மார்கழி 25 பிறந்த நாள்

இறை மக்கள், அன்பர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

## பங்குகளில் சிறப்பிக்கப்பட்ட மறைக்கல்வி வாரம்



லூர்து அன்னை திருத்தலம் – பாலையூற்று



புனித சூசையப்பர் ஆலயம் – நிலாவெளி



புனித சவேரியார் ஆலயம் – கும்புறுபிட்டி



சிலுவைமலை ஆலயம் – சாம்பல்தீவு



குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை



புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம் – பள்ளத்தோட்டம்



புனித அந்தோனியார் ஆலயம் – மூதூர்



புனித சதா சகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம்



புனித சதா சகாய அன்னை ஆலயம் – கந்தளாய்



புனித அந்தோனியார் ஆலயம் – சீனக்குடா



புனித வனத்து அந்தோனியார் ஆலயம் – செல்வநாயகபுரம்



புனித யூதாததேயு ஆலயம் – இலிங்கநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பத்திரிகை ஆசிரியரின் பேனா...

**அனைவருக்கும் நத்தார் புதுவருட நல் வாழ்த்துகள்,**

2023 என்னும் வருடம் பல சவால்களோடு நிறைவுக்கு வருகிறது. பல வகையான கஷ்டங்களையும் அனர்த்தங்களையும் எதிர்கொண்டு தாழ்ந்து எழுந்து மீண்டு நடைபோட வேண்டிய நிலைமை. ஆனால் ஒவ்வொரு காலகட்டத்திலும் இறைவன் நமக்கும் நம் குடும்பங்களுக்கும் துணையாக அடைக்கல பாதையாக காத்து பேணி வருகின்றார் என்பது கண்கூடு.

கிறிஸ்மஸ் என்றாலே எல்லோருக்கும் குதூகலம் இவ்வருடமும் பல்வேறுவகையான எதிர்பார்ப்புக்களோடும் அதே வேளையிலே நம்பிக்கையோடும் தான் கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் எதிர்கொள்கின்றோம். ஆண்டவர் இயேசு ஒளியாகவும் அமைதியின் வேந்தனாகவும் சமாதானத்தின் ஊற்றாகவும் நமக்குக் கிடைத்த பரிசாக வந்துதித்தார். அவர் விதைத்துவிட்டுச் சென்றிருக்கின்ற ஒளியாக நாம் மிளிரவும் அமைதியை, சமாதானத்தை மக்கள் மத்தியில் பரப்புபவர்களாகவும் இருக்க அழைக்கப்படுகின்றோம்.

2024 ஆம் ஆண்டை என்ன சொல்லி வரவேற்பது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் பல முன்மொழிவுகளை உள்வாங்கி இருக்கிறார். முன்மொழியப்பட்டுள்ள பாதீட்டு விடயதானங்களை அமுல்படுத்த போதுமான பண வசதிகளை எங்கிருந்து எடுப்பது, கையாளுவது என்பது சம்பந்தமாக எந்த வெளிப்படை விடயங்களும் கோடிட்டுக் காட்டப்படவில்லை. ஆனால் ஒரு உண்மை 2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டை பார்க்கவும் கேட்கவும் கவர்ச்சிகரமாக இருக்கிறது என்பது மாத்திரம் மறுக்க முடியாத உண்மை. கவர்ச்சியா இப்போது முக்கியம் நாளா நாளைக்கு பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பதும் கல்வி ஊட்டுவதும் தானே நமது தற்போதைய அத்தியாவசிய தேவை. IMF க்கு அடிபணிந்ததால் VAT வரிக்கும் அடிபணியத் தான் வேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு 10,000.00 சம்பள உயர்வு கொடுத்து என்ன பயன் விலைவாசிதான் ஏறுமுகத்தில் இருக்கிறதே.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அடிகள் 2024 ஆம் ஆண்டை செப ஆண்டாக உலகளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தியுள்ளார். 2025 என்னும் ஜுபிலி ஆண்டை அர்த்தமுள்ள வகையில் சிறப்பிக்கும் முகமாகவே 2024 ஆம் ஆண்டை செப ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளார். நாம் தனித்தோ அல்லது பலரோடு இணைந்தோ செபிக்க முடியும். நீண்ட பாரம்பரியத்தை உடைய கத்தோலிக்க திருஅவையில் பல்வேறு வகையான செப முறைகள் உள்ளன. அவை புத்தகங்களாகவும் எழுத்துருவிலும் உள்ளன. இவற்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என திருத்தந்தை எம்மை அழைக்கிறார்.

கத்தோலிக்கர்களுக்கு செபிக்கத்தெரியாது என காளான் திருஅவையினர் குற்றம் சாட்டுவதுண்டு. அக்குறையை நீக்க நாம் அனைவரும் தனித்தோ அல்லது ஒன்று கூடியோ செபிப்போம். பல்வேறு தேவைகளுக்காக செபிப்போம். உலக சமாதானத்துக்காக செபிப்போம். இலங்கையின் பொருளாதார சீரமைவிற்காக செபிப்போம் எதிர்கொள்ளப்போகும் ஜுபிலி ஆண்டில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகளுக்காகவும் செபிப்போம்.

2024 என்னும் செப ஆண்டு சீரும் சிறப்பும் மிக்கதாக அனைவருக்கும் அமையட்டும்.

*அருட்பணி. அ.அ. றொஹான் பேனாா்ட்*

திருமலைத்தீபம்
மறைக்கல்வி நடுநிலையம்
இல. 297, கடற்படைத்தள வீதி
திருகோணமலை
ஆசிரியர் - 026 222 1012
theepamlink@gmail.com

## ஆயரின் செய்தி தொடர்ச்சி ...

அறிவித்தார். இடையர்கள் உடனே விரைந்து சென்று குழந்தையையும் பெற்றோரையும் கண்டு தமக்குக் கொடுக்கப்பட்ட செய்திபற்றி அறிவித்தனர். செய்தி, செயல், அனுபவம், பகிர்வு. இடையர் தமக்குக் கிடைத்த செய்தி வித்தியாசமானதாக இருந்தாலும் செயல்பட்டனர். பெத்லகேமுக்கு "விரைந்து சென்று மரியாவையும், யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டார்கள்" (லூக் 2:16). இவ்வாறு செயல்பட்டதால் இவர்களது அனுபவம் புதுமையானதாகவும் ஆழமானதாகவும் இருந்தது. சமூகத்தால் ஒரு பணிக்கென கழித்துவைக்கப்பட்ட இவர்களுக்கு மாறுபட்ட அனுபவம். இதனால் இவர்கள் "தாங்கள் கேட்டவை, கண்டவை அனைத்தையும் குறித்துக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டே திரும்பிச் சென்றார்கள்"(லூக் 2:20)

எமது வாழ்வில் நாம் செய்திகளைக் கேட்கின்றோம். திருப்பலி வாசகங்கள். மறையுரை. வழிபாடுகள், விவிலிய வாசிப்பு, தியானம் போன்றவை மூலமாக இறைசெய்தியைப் பெறுகின்றோம். இவற்றை நாம் வெறும் செய்தியாக மட்டும் கணித்துவிட்டு அமைதியாகிவிடுகின்றோம், செயல்படுவதில்லை. இச்செய்தி எனக்காக இருக்கலாம் என எண்ணினாலும் நாம் அடுத்த நகர்வை எடுப்பதில்லை. செயல்படாவிட்டால் அனுபவம் கிடைக்கப் போவதில்லை. அனுபவம் கிடைத்தால்தான் பகிர முடியும், சான்று பகர முடியும். எனவே இடையர்போல துணிந்து செயல்படுவோம். இயேசுவை அடுத்திருப்பவரில் கண்டு பணிசெய்வோம்.

"மலையகம் 200" எமது மலையக மக்கள் 200 வருடங்களுக்கு முன்பு பிரித்தானியர் காலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு தேயிலை தோட்டங்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டனர். அன்றுமுதல் இன்றுவரை இவர்ளகளது நிலை மாறாமல் உள்ளது. எனவே 'மலையகம் 200' என்பது இவர்களது வருகையைக் கொண்டாடுவதற்கு அல்ல. மாறாக இவர்கள் நிலையை எவ்வாறு உயர்த்தலாம் என்று சிந்தித்து செயல்படுவதற்கே. 200 வருடங்களாக இவர்கள் பல துன்பங்களை அனுபவித்து உழைத்து இலங்கைக்கு தேயிலை உற்பத்தி மூலமாக வருமானத்தை ஈட்டிக் கொடுத்தாலும் இவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த யாரும் இதய சுத்தியோடு முன்வரவில்லை. கிழக்கிலிருந்து எம்மால் என்ன செய்ய முடியும் எனும் கேள்வி எமக்குள் எழலாம். இந்நாட்களில் அன்புவழிபுரப் பங்கிலிருந்து திருவருகைக்கால சேமிப்பிலிருந்து பங்கு மக்கள் பங்குத் தந்தையோடு இணைந்து உலர் உணவுப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் என மலையக மக்களுக்குத் தேவையான பொருட்களை சேமித்து பதுளை மறைமாவட்டத்தில் தேவையில் உள்ள 100 குடும்பங்களுக்குக் கொடுக்கவுள்ளனர் பாராட்டுக்கள். இதேபோன்று ஏனைய பங்குகளும் திட்டங்களை வகுத்து பல உதவிகளைச் செய்யலாம். மலையக மக்களது வாழ்க்கைத் தரம் உயர மன்றாடுவோம். இவர்களுக்காக இந்நாட்களில் விசேட விதமாக செயல்படுவோம்.

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வாழ்த்துகளையும் புதுவருட வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இறைவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவில்,**

## ஆசிரியரின் ஏக்கம்...



திருமலைத்தீபம் பத்திரிகை திருகோணமலை மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கிறிஸ்தவ மக்களின் பத்திரிகை ஆகும். ஆயினும் இப் பத்திரிகையை எவ்வளவு தூரம் பயன்படுத்துகின்றீர்கள். என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயம். திருமலைத்தீபம் பத்திரிகையை எத்தனை பேர் நேசிக்கின்றீர்கள். எத்தனை பேர் வாங்குகிறீர்கள். எத்தனை பேர் விடயதானங்களைத் தருகின்றீர்கள். என்று பார்த்தால் மிகக் குறைவு என்றே கருதவேண்டும்.

முன்னர் கலாபூஷணம் புலவர் A.W. அரியநாயகம், கலாபூஷணம் திரு. தா.பி. சுப்பிரமணியம், திருமதி. ஆஞ்சலின் சுப்பிரமணியம் போன்று இன்னும் பலர் எழுதி வந்ததோடு உரைகள் நிகழ்த்தியும் பல்வேறு செயற்பாடுகளிலும் பங்கெடுத்தனர். அவர்களில் எவரும் இன்று நம்முடன் இல்லை.

தொடர்ந்து கிறிஸ்தவ விழுமியங்களை எழுதுவதற்கு யாரும் இல்லையே என்று கவலை அடைகின்றோம். தற்போது திருமலைத்தீபம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை தான் வெளிவருகின்றது. அதற்கு எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சனையும் ஒரு காரணம். உங்கள் ஆதரவின் வலு போதாமல் இருப்பதும் ஒரு காரணம். மீண்டும் ஒவ்வொரு மாதமும் பத்திரிகை வெளிவரவேண்டுமாயின் உங்கள் முயற்சியிலும், ஆதரவிலும் தான் தங்கியுள்ளது.

நாம் எழுத்தாளர்களை மூன்று விதமாக வகைப்படுத்துகின்றோம்.

1. வளர்ந்தோர் - ஆண்கள், பெண்கள்
2. இளைஞர் - யுவதிகள்
3. பாடசாலை மாணவர்கள்

மேற்படி மூன்று பிரிவினருள் எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் திருமலைத்தீபத்திற்கு ஆக்கங்களை எழுதும்படி வேண்டுகின்றோம். கவிதை, கட்டுரை, சிறுகதை, உங்கள் ஆலயத்திருவிழா, ஆலய வரலாறு, திருமலைத்தீபம் பத்திரிகை பற்றிய உங்கள் கருத்துக்கள் போன்ற விமர்சனங்களையும் அனுப்புங்கள்.

தற்போது உள்ள எமது சமூகத்தில் எழுதுவதற்கு யாரும் இல்லை என்பது முடிவு அல்ல. இருக்கிறார்கள். ஆனால் தங்களை வெளிக்காட்ட விரும்பாமல் இருக்கிறார்கள். நல்ல சிந்தனையுள்ளோர், கற்பனை வளம் உள்ளோர் எல்லோரும் இலைமறை காய் போல மறைந்திருக்கிறார்கள். தாழ்வு மனப்பான்மையும் ஒரு காரணமாக இருக்கலாம். உங்களைத்தான், எழுந்து வாருங்கள் ஒரு புதிய சமுதாயம் அமைக்க விரைந்து வாருங்கள்.

நம்மால் முடிந்த வரை செய்வதல்ல முயற்சி, நினைத்த செயலை வெற்றிகரமாக முடிக்கும் வரை செய்வதே உண்மையான முயற்சி, எழுத்தாற்றலும் ஆண்டவர் நமக்குத் தந்த கொடைதானே. ஆகவே எழுதியும் இறையரசைப்பரப்ப கைகோர்ப்போம்.

*அருட்பணி. அ.அ. றொஹான் பேனாா்ட்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே!

டிசம்பர் என்றதும் நமக்கு கிறிஸ்து பிறப்பு பெருவிழா மகிழ்ச்சி வந்துவிடுகின்றது. நாம் அனைவரும் மீட்பு பெறவேண்மென்ற மாபரன் கிறிஸ்து மனுவுரு எடுத்துபாடுகள் பட்டு நம் பாவங்களையெல்லாம் நீக்கி நம்மை மீட்டார். இதனை நாம் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுகின்றோம். இந்த மாதம் முழுவதும் அதற்கான கொண்டாட்டமாகவே அமைகின்றது என்றால் அது மிகையாகாது.

ஒவ்வொரு கொண்டாட்டமும் நமக்கு ஒரு சிறப்பான அழைத்தலை விடுக்கின்றது. அது போன்று இந்த கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவும் நமக்கு ஒரு சிறப்பான அழைப்பை விடுகின்றது. அந்த அழைப்பைப் பற்றி இந்தக் கட்டுரையில் காண்போம்.

ஒரு சிறுவனுக்கு அவனது தாய் ஒரு பணியைத் தந்தார். அவரது வீட்டிலிருந்து அன்று செய்த சில பலகாரங்களை எடுத்துக் கொண்டு போய் அடுத்த ஊரிலிருந்த சொந்தக்காரர் வீட்டில் கொடுத்துவிட்டு வரவேண்டும். சிறுவனிடம் அந்தப் பலகாரப் பையைக் கொடுத்துவிட்டு "உனக்கு வேறு என்ன வேண்டும்?" என்று கேட்டார். சிறுவன் சிந்தித்தான் அந்த வழி ஒரு ஆபத்தான வழி நடுவே ஒரு ஆறு இருக்கின்றது அந்த ஆற்றைக் கடக்க வேண்டும், அதன் பின் ஒரு காட்டுப் பகுதி இருக்கின்றது. அந்தக் காட்டுப் பகுதியில் பல காட்டு நாய்கள், நரிகள் இருக்கும் அதைக் கடக்க வேண்டும். அதன் பின் சதுப்பு நிலமான ஒரு பகுதி உண்டு, அதில் அட்டைப்பூச்சிகள், பாம்புகள் போன்றவை இருக்கும். அதையும் கடக்க வேண்டும் சிறுவன் யோசித்தான் ஆற்றைக் கடக்க படகு சவாரி செய்ய வேண்டும் அதற்கு பணம் வேண்டும் சிறிது பணம் கேட்டான். அதன் பின் காட்டு நாய்களை சமாளிக்க நல்ல ஒரு தடி வேண்டும் அதையும் எடுத்துக் கொண்டான். அதன் பின்



அட்டைப் பூச்சிகள், பாம்புகள்... அதற்கென சிறப்பாக தயாரிக்கப்பட்ட காலணியை அணிந்து கொண்டான். வெகு தூரம் போக வேண்டியிருப்பதால் பயணத்திற்கு உணவு, தண்ணீர் போன்றவை எடுத்துக் கொண்டான். இப்போது அவனால் அந்தப் பொருட்களை சுமக்க முடியவில்லை. அம்மா கேட்டாள், "இது போதுமா திருப்தியாக செல்வாயா? அம்மாவின் இந்தக் கேள்விக்கு, சிறுவனின் பதில், "இந்தப் பொருட்கள் போதுமா என்று தெரியவில்லை. ஆனால் எனக்கு பயமாக இருக்கின்றது. நான் பாதுகாப்பாகச் சென்று வந்துவிடுவேனா?"

தான் சுமக்க முடியாத சுமைகளாக பொருட்களை தூக்கிச் சென்றாலும் அது அவனுக்குப் பாதுகாப்பு உணர்வைத் தர முடியவில்லை. இதைப் பார்த்த அவனது தந்தை, "உனக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் எடுத்து வை, அவற்றை நான்



## இறைவனின் கரம் பற்றி...

சுமந்து கொள்கிறேன் நீ என் கையை மட்டும் பிடித்துக் கொள் பிடித்துக் கொண்டு சந்தோஷமாக நடந்துவா!" என்று சொல்ல, அவன் தான் அணிந்திருந்த பாரமான காலணியை கழற்றி எறிகின்றான், கையில் வைத்திருந்த தடியை கீழே போடுகின்றான், எடுத்துக் கொண்ட பணத்தை தன் தந்தையிடம் கொடுத்துவிட்டு, தங்கள் சொந்தக் காரருக்குக் கொடுக்க வேண்டிய பொருட்களை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு தந்தையின் கரத்தைப் பிடித்துக் கொண்டு பயணத்திற்கு தயாராகி விடுகின்றான்.

அம்மா கேட்கின்றாள் "கொஞ்ச நேரத்திற்கு முன் நீ வைத்திருந்த பொருட்களையெல்லாம் ஏன் வீசி எறிந்தாய்? உனக்கு அவை தேவையில்லையா?" எனக் கேட்ட

அம்மாவுக்கு சிறுவன் சொன்ன பதில், "அவையெல்லாம் தேவையற்ற சுமைகள் அப்பா வருகின்றார். அது மட்டும் போதும் எனக்கு வேறு எதுவும் வேண்டாம்!" இந்த பதிலைக் கேட்ட அம்மா அவனிடம், "அங்கே பாம்புகள் இருக்கின்றன, காட்டு விலங்குகள் இருக்கின்றன, நீ எப்படி சமாளிப்பாய்?" என்று கேட்க, சிறுவனின் பதில், "அது என் கவலை இல்லை எல்லாவற்றிற்கும் பயிற்சி எடுத்த என் தந்தையின் கவலை அவர் அனைத்தையும் பார்த்துக் கொள்வார். நான் நடக்க முடியும் இடத்தில் என்னை நடக்க வைப்பார் நடக்க முடியாத இடத்தில் அவர் என்னைத் தோளில் தூக்கிச் செல்வார். எனவே என்னை அளவுக்கதிகமாக அன்பு செய்யும் என் அப்பா என்னோடு வரும் போது நான் எதற்குக் கவலைப்பட வேண்டும்?

அன்பார்ந்தவர்களே, இந்த நிகழ்வை நாம் நமது வாழ்வுக்கு ஒப்பிடலாம். நமது வாழ்வும் இது போன்ற பல ஆபத்துக்களை உள்ளடக்கிய பாதை தான் யாருமே பயணிக்காத புதியதோர் பாதை அது. அந்தப் பாதையின் நெளிவு சுழிவுகளை யாரும் அறியார். எனவே தான் அந்தப் பாதைக்காக நாம் பணத்தையும் அதிகாரத்தையும் பெயரையும் சேர்க்க ஓடி ஓடி உழைக்கின்றோம். ஆனாலும் நமக்கு அந்தப் பொருட்கள் நிம்மதியைத் தருவதற்குப் பதிலாக பல தொல்லைகளையும் பிரச்சனைகளையும் கொடுக்கின்றன.

எவ்வளவுக்கு பொருட்களை சேகரிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமக்கு பிரச்சனைகளும் வந்து சேர்கின்றன. இந்தப் பிரச்சனைகளிலிருந்து விடுபட வேண்டுமா? தந்தையாம் கடவுளின் கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்வோம். அவர் நமக்கு அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் விடுதலை தருவார். இந்த உலக செல்வங்கள் நமக்கு மாயையைத் தருமே தவிர உண்மையான மகிழ்ச்சியைத் தராது. மாயை இருப்பது போன்ற தோற்றம் மட்டும் தானே தவிர உண்மையல்ல.

அன்பார்ந்தவர்களே, நம் எதிர்கால வாழ்வாகிய நம் வாழ்க்கைப் பயணத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற உணர்வில் நாம் நிகழ்காலத்தை மறந்து இறந்த காலத்தையும் மறந்து எதிர்காலத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் நாம் நிகழ்காலத்தில் வாழ்ந்திருந்தாலே போதும், நமது அனைத்து மகிழ்வுகளுக்கும் அதுவே வழிகோலும். அதை விடுத்து நாம் அறியாத யாருமே அறிந்திராத அந்த எதிர்காலத்திற்காக நம்மை இழந்து பொருட்களை சேகரித்துக் கொண்டிருக்கின்றோம்.

அவற்றை விடுத்து நம்மைத் தேடிவந்து நம்மிடையே பிறக்க இருக்கும் நம் ஆண்டவரின் கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்வோம். அவரே நம் எல்லாமுமாக இருக்கின்றார். அவர் நம்மோடு இருந்தால் பவுலடிகளார் சொல்வதற்கிணங்க இந்த உலக செல்வங்கள் எல்லாம் குப்பையாகவே நமக்குத் தோன்றும்.

நமக்கு எல்லாமுமான அந்த இறைவன் நம் மத்தியில் வந்து பிறக்கப் போகின்றார் என்பது உண்மையில் மிகவும் மகிழ்ச்சியான செய்தி தான். அந்த மகிழ்ச்சியையே நாம் கோலாகலமாக கொண்டாடுகின்றோம். நம் மகிழ்ச்சி இன்னும் பெருக இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவில் இறைவன் நம்மோடு வந்து தங்குவாராக. இறைவன் நம்மை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.




இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதகுலத்தை மீட்க வந்த இரட்சகர்

[வாசகர்கள் கருத்திற் கொள்க மேற்படி கட்டுரை தேம்பாவணியை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.]

கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர் இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். (லூக்கா 1:30)

கிறிஸ்மஸ் என்றதும் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். சிறுவர் முதல் பெரியோர் வரை கிறிஸ்மஸ் விழாவை சிறப்பாக கொண்டாடுவர்கள். தாவீது மன்னன் மரபில் பிறந்த சூசையப்பர் சகோபு என்பவரின் மனைவியான நீப்பி என்பவருக்கு மகனாக யூதேயா நாட்டில் பிறந்தார். தாய் பெரு மகிழ்ச்சியோடு குழந்தையை எடுத்து "ஆண்டவரே, என் குழந்தை வளர்பிறை போல் வளர்வதற்கு ஆசி அருள்க" என வேண்டினாள். அருளெனும் அமுதை ஊட்டி, அறம் எனும் முடியைச் சூட்டி, தவம் எனும் அணியைப் பூட்டி, ஞானச் செங்கோலைக் காட்டி பேணி வளர்த்தார்கள்.

**மரியாளின் திருமணம்**

சீமையோன் சூசையப்பரையும் மரியாளையும் அருகில் அழைத்து ஆசி கூறி சூசையப்பர் கைமேல் மரியாளின் கையை வைத்து "உனது குலத்தில் இறைவன் மனிதனாக அவதரிப்பாராக" என்று வாழ்த்தி திருமண சடங்கை நடாத்தி வைத்தார். திருமணம் நடைபெற்றபோது சூசையப்பருக்கு முப்பத்து மூன்று வயது. மரியாளுக்கு பதினான்கு வயதாகும். (ஆதாரம்: தேம்பாவணி)

**மரியாள் கலக்கமடைதல்**

சூசையப்பரும் மரியாளும் திருமணம் நிறைவடைந்து வாழும் நாட்களில் ஏழாம் மாதம் கபிரியேல் தேவதூதர் மரியாள் திருவடியை வணங்கி "மாதருள் அருள் நிறைந்த செல்வியே வாழ்க, நீ பூவுலகின் பொதுமுறை நீங்கிய வழியால் அற்புதமாக கருத்தரித்து ஒரு குழந்தையைப் பெறுவாய் அதற்கு இயேசு என்னும் பெயரிடுவாய். அவர் தேவகுமாரனாம் பூவுலகின் காவலனாய் இருந்து இனிது ஆள்வான் என்றார். இதைக் கேட்ட மரியாள் கலக்கமடைந்தாள். "அழிவில்லாத கன்னிகை குழந்தை பெறுவது எவ்வாறு?" என்று வினவினாள்.

"தூய ஆவியின் அருளால் இறைமகனை நீ பெறுவாய், கடவுள் உன் கன்னிமையைக் காப்பார்" என்றார். "இதோ நான் கடவுளின் அடிமை, உன் வாய்ச்சொற்படி எனக்கு ஆகுக." என்றாள் மரியாள் அன்று முழுவதும் இறைவனை நினைத்து உருகினாள். தெய்வீக இன்பம் அவள் உள்ளத்தில் பொங்கியது.

**சூசையப்பர் ஐயமுறல்**

மரியாள் கர்ப்பமுற்றிருந்த ஐந்தாம் மாதம் கன்னித்தாயின் மீது சூசையப்பருக்கு சந்தேகம் ஏற்பட்டது. "கடவுளின் ஏவுதலால் இக் கன்னியை நான் மணந்த போது ஏற்றிய மலர்க்கோல் இன்னும் வாடவில்லை அப்படியிருக்க இவ் அரச்செல்வியின் கன்னிமை மலர் எங்ஙனம் வாடும்" மழைபோல் கண்ணீர் சொரிந்து அழுது கொண்டிருந்தார்.

"வானகமும் வையகமும் வணங்கும் வரம் பெற்ற ஐயனே, நீ ஐயத்தால் அவதி உறுவதேன். ஒரு கன்னி கர்ப்பம் தரித்து ஒரு புத்திரனைப் பெறுவாள் என்ற வேத வாக்கியத்தை நீ அறிவாயோ? உன் துணைவியிடம் கடவுள் மகனாக அவதரித்து ஏழுமாதங்கள் ஆகின்றன. அவள் பெறும் மகனுக்கு இயேசு எனும் நாமம் சூட்டுவாயாக" என்று வானதூதர் அறிவித்தார். "வானோரும் தொழும் மேன்மையாளை நான் ஐயம் கொண்டேனே, நீதியின் கண்ணாடியை வேதத்தின் அரியாசனத்தை. தருமசீலியை நான் ஐயுற்றேனே. இனி அவள் பால் எங்ஙனம் செல்வேன் என்று வருந்தி அழுதார். பின் ஒருவாறு தேறி மரியாளின் பொன்னடியில் வீழ்ந்து வணங்கித் தம் குற்றங்களைப் பொறுத்தருளுமாறு அழுது வேண்டினார் சூசையப்பர்.

மனிதன் பலவீனமுற்றவன் என்ற வகையில் நமக்கும் சில சந்தர்ப்பங்களில் சந்தேகங்கள் ஏற்படுகின்றன. கணவன் மனைவி மீதும், மனைவி கணவன் மீதும், பெற்றோர்கள் பிள்ளைகள் மீதும், பிள்ளைகள் பெற்றோர் மீதும் சந்தேகப்பட்டு பாவசகதிக்குள் விழுந்து விடுகின்றோம்.

**அகுஸ்துசீசர் மக்கள் தொகையை கணக்கெடுத்தல்**

மார்கழி மாதம் பனி விழும் காலம் கடவுள் குழந்தையாக பிறக்கும் காலம் நெருங்கியது. அகுஸ்துசீசர் தாமும் பேரரசு முழுவதும் மக்கள் தொகையை கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தான். தத்தமது பெயரைப் பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் செல்ல ஆயத்தமாயினர். சூசையப்பரும் அக்கட்டளையைக் கேள்வியுற்று தாம் பெத்திலேம் நகருக்கு போகவேண்டி இருப்பதையும் கர்பமுற்ற தம் மனைவி முட்கள் நிறைந்த வழியில் துன்பமுறுவாளே என்று கவலைப்பட்டார். பெத்திலேமில் தனது இனத்தவரான தாவீதின் மரபினோர் வீட்டில் தங்கித் துன்பம் தணிக்கலாம் என்று எண்ணி இருவரும் பெத்திலேமுக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் சென்ற இடமெல்லாம் தேவ அருள் நிறைந்திருந்தது. ஆறுகள் பெருகி ஓடின, வயல்களில் நெற்பயிர்கள் ஓங்கின, மரக்கிளைகளில் புது மலர்கள் பூத்துக் குலுங்கின, பறவைகள் தம் மகிழ்ச்சியை புலப்படுத்தின.

**பெத்திலேமில் சூசையும் மரியாளும் அல்லலுறல்**

சூசையும், மரியாளும் பெத்திலேம் நகரை அடைந்ததும் அவர்கள் படவிருக்கும் துயரத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் கதிரவன் மேற்குத் திசைக் கடலில் சங்கமித்தான். சூசையப்பரும் மரியாளும் தங்கும் இடம்தேடி வீதி தோறும் அலைந்தனர். உறவினரைக் கெஞ்சினர். அவர்களோ "இடம் இல்லை" என்றனர். "உறவு நோக்காவிடினும் வானுலக இன்பந்தரும் இரக்கமேனும் காட்டுமாறு இரந்து வேண்டினர்." அவர்கள் ஏளனமாக நகைத்தனர் இறுதியாக நகரின் வெளியே உள்ள குகைக்குச் செல்வோம் என இருவரும் ஒரு மனதாய் முடிவெடுத்து அங்கே சென்றனர்.

**இயேசுவின் பிறப்பு**

அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்ததும் அக்குகை பூங்காவைப் போல் பொலிவுற்றது. மரியாள் தம் துணைவரை ஓரிடத்தில் உறங்கும் படி வேண்டி இறைவனைத் தொழுத வண்ணம் இருந்தாள். அச்சமயம் திருக்குமாரன் தன் வயிற்றில் அசைவதை உணர்ந்தாள். ஒரே கடவுளாகிய மூன்று ஆட்களுள் உலகம் காணக்கூடிய ஆளாகிய தேவகுமாரனை ஈன்றெடுத்தாள்.

இன்று நமது நாட்டில் இருக்க இடம் இன்றி அல்லலுறும் மக்களைப் பற்றி சிந்திக்கின்றோமா? சூசையப்பர் மரியாளைப் போல் இருக்க இடம் தேடி அலையும்



ஜோ. நோமன் பல்தஸார்

எத்தனையோ பேர் இன்று உள்ளனர். எமது நாட்டில் பொருளாதாரப் பிரச்சனை ஏற்பட்ட போது நாம் என்ன செய்தோம்?

நோவாவின் பேழைக்குள் உலகப் பொருளாதாரத்தையே அடக்கிய இறைவனுக்கு இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்க்கமுடியாதா? அதற்கு நாம் ஜெபிக்க வேண்டும். நமக்கு ஏற்படும் துன்பங்களுக்காக நாம் ஜெபித்தால் விமோசனம் கிடைக்கும் அல்லவா? இவ்வாண்டில் கொண்டாடும் கிறிஸ்மஸ் விழாவை பிரார்த்தனையில் ஈடுபட்டு ஜெபத்தின் மூலம் தீர்வைக் காண்போம். கிறிஸ்மஸ் விழாவை அர்த்தமுள்ளதாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் தீபம் மடல் – 01



# உன் வாழ்க்கை உன் கையில்

இயற்கை பொங்கினால் எழில் என்கிறோம். இல்லத்தில் பானை பொங்கினால் வளம் என்கிறோம். மண்ணில் நிலம் பொங்கினால் பசுமை என்கிறோம். விண்ணில் நிலவு பொங்கினால் குளுமை என்கிறோம். அன்பு பொங்கினால் இறைவன் என்கிறோம். மாணவருக்கு கல்வி பொங்கினால் விடியலாகும்.



திருஇருதய ஆண்டவரின் ஆசியுடன் எழுதும் முதல் கடிதம் உனக்கு பள்ளிப்பருவம் அருமையான இளமைப்பருவம் கல்வி கற்கும் கணமானகாலமிது. உனது கல்விப் பிரச்சனை என்ன என்பதை நான் அறிவேன். ஐம்பது வருடங்களாக உன் போன்ற மாணவர்களுடன் தான் சங்கமமானது என் வாழ்க்கை. உன்னைப் போல எத்தனையோ மாணவர்களுக்கு வழிகாட்டிய அனுபவம் எனக்கு. ஆகவே அனுபவத்தை சொல்லப் போகிறேன் உனக்கு.

இன்றைய மாணவர் சமூகத்தில் சிலர் சிறப்பாக கற்பார்கள், சிலர் சுமாராக கற்பார்கள், சிலர் கற்பது போல் நடிப்பார்கள். சிலருக்கு கல்வியே வராது இப்படிப் பல வகையாக மாணவர்களை வகைப்படுத்தலாம். இதில் நீ எந்த வகை? எந்த வகையாக இருந்தாலும் கவலைப்படாதே, நீ படிக்கவில்லை என்பதற்காக புறம்தள்ளி வைக்கமுடியாது. உனக்கென்று ஒரு வாழ்க்கையை கடவுள் தருவார் கவலைப்படாதே.



உன் கல்வி நிலை மேலும் உயர வேண்டும் என்பதற்காக இம்மடல் மூலமாக சில ஆலோசனைகளை வழங்கத்தான் எழுதுகிறேன். நீ எந்த வகுப்பில் படித்தாலும் எழுதுவதை கவனமாக வாசித்து உன்மனதில் பதித்துக்கொள்.




தூய ஆவியானவருக்குரிய செபத்தை எடுத்துக்கொள். நடந்து போகக்கூடிய தூரத்தில் ஆலயம் இருக்குமாயின் ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்குப் போ. நற்கருணை ஆண்டவர் முன்னிலையில் முழந்தாள் படியிட்டு பணிந்து செபி. ஆலயம் தூரமாயின் வீட்டிலேயே செபி ஒவ்வொரு நாளும் தூய ஆவியானவரிடம் மிக பயபக்தியோடும், மனதை ஒரு நிலைப்படுத்தி வேறு சிந்தனைகளைக் களைந்து உன் பிரார்த்தனையைச் செய்.

ஆசிரியர் கற்பிப்பது உனக்கு விளங்கவில்லையா? கற்பது உனக்கு கடினமானதாக இருக்கின்றதா? எவ்வாறான பிரச்சனைகளாயிருந்தாலும் தூய ஆவியானவரிடம் மனம் விட்டுப் பேசு உன் தாயிடம் கதைப்பது போல், உன் நண்பனிடம் கதைப்பதுபோல் மனம் விட்டுப் பேசு. அப்படி பேசிக் கொண்டிருக்கும் போது உன்னை அறியாமலே கண்கள் கலங்கும், கண்ணீர் உன் கண்களால் வழிந்தோடும். இன்னும் அழு, அழுது கேள்.



இயேசு தன் திருப்பாடுகளின் போது எவ்வளவு வேதனைப்பட்டார். எவ்வளவு கண்ணீர் அவர் கண்களினால் வழிந்தோடியிருக்கும் என்பதை சிந்தித்துப் பார். உன் நோக்கம் வெற்றி பெற வேண்டுமாயின் அருகில் யார் இருந்தாலும் கவலைப்படாதே இறைவன் சன்னிதானத்தில் உன் அழுகுரல் கேட்கும். அவர் உனக்கு பதில் தருவார்.

உன் உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்படுவதை உணர்வாய். உன் மனம் தெளிவடையும் உன் மனதில் மகிழ்ச்சி நிலை ஏற்படும். நீ கேட்ட கல்வித் தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவடைவதை நீ உணர்வாய். அவ்வாறு உணரும் போது தூய ஆவியானவருக்கு நன்றி கூற மறந்திடாதே.



தொடர்ந்து தினசரி நன்றியோடு கூடிய இறைவேண்டல் சிறப்பானது. உன் கல்வித் தேவைகளோடு உனக்கு தேவையான அனைத்தும் நிறைவடைவதை நீ காண்பாய். கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும். ஆண்டவர் அண்மையில் உள்ளார். எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை தெரிவியுங்கள். (காண்க. பிலிப்பியர் 4:5-6)

உன் வாழ்க்கை உன் கையில்.

அடுத்த இதழில் சந்திப்போம். (தொடரும்....)

ஜோ. நோமன் பல்தஸார்
ஓய்வுநிலை அதிபர்



# மெக்ஸிக்கோவின் குவாடலூப்பே அன்னை





மார்கழித் திங்கள் 12ஆம் நாள் புனித குவாடலூப்பே அன்னையின் திருநாள் கொண்டாடப்படுகின்றது. 1531 ஆம் ஆண்டு நல்மனம் உடையவனும் எளியவனுமாகிய மெக்ஸிக்கோ இந்தியனுமாகிய யுவான் தியேகோவிற்கு குவாடலூப்பே அன்னை காட்சியளித்தாள். அன்னை காட்சி கொடுத்த "திபேயாக்" குன்றின் அருகே தனக்கு ஆலயம் அமைக்கும்படி பணித்தாள். ஆயரிடம் அனுமதி பெறத்தேவையான அடையாளத்தையும் யுவானுக்கு வழங்கினாள். மெக்ஸிக்கோவில் அன்னையின் ஆலயத்தில் பலபுதுமைகள் நடைபெற்று வருகின்றன 472 வருடங்களாக வருடா வருடம் இரண்டு கோடிப்பக்தர்களால் தரிசிக்கப்பட்டு வருவதாகவும் வத்திக்கானுக்கு அடுத்ததாக அதிக மக்கள் தரிசிக்கும் இரண்டாவது பேராலயமாக உலகில் திகழ்கின்றது.

அத்துடன் சின்னக்கடை பங்கில் அமைந்துள்ள குவாடலூப்பே அன்னை ஆலயம் 1956 ஆம் ஆண்டு ஆயர் இக்னேஷியஸ் க்ளெனி ஆண்டகை அவர்களால் மெக்ஸிக்கோவில் இருந்து தருவிக்கப்பட்ட புனித குவாடலூப்பே அன்னையின் படம் ஸ்தாபிக்கப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டது. அன்றைய பங்குத்தந்தை அருட்பணி ஜோன் பீற்றர் அடிகளார் ஆலயத்தை அமைத்தார். இன்னும் எமது ஆலயத்தில் பல் இன மக்களும், பல நாட்டினரும் அன்னையைத் தரிசித்து அன்னையின் பரிந்துரையால் பல புதுமைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பது விசேட அம்சமாகும். (2002 ஆம் ஆண்டு யூலை 30 ஆம் நாள் திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பரால் யுவான் தியேகோ புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்)

K. ஜசிந்தா
குவாடலூப்பே பங்கு

மாணவர் தீபம்

## மானிடனாய்ப் பிறந்திடுவீர்....



பாவி என்னை மன்னிக்கவும்
பாவம் தனைப் போக்கிடவும்
பாதகர் நாம் மாறிடவும்
பாலகனாய்ப் பிறந்திடுவீர்

அயலார் அன்பு பெருகிடவும்
அருட் கரங்கள் நீட்டிடவும்
அகந்தை உடையோர் அகன்றிடவும்
அருள் ஒளியாய்ப் பிறந்திடுவீர்

அருள் தனை வளர்த்திடவும்
அமைதி வழி சென்றிடவும்
அனுதினம் உம்மைச் சுவைத்திடவும்
அன்பனே நீர் பிறந்திடுவீர்

மாறிவரும் உலகினிலே
மாற்றம் தனில் மாய்ந்திடாது
மாந்தர் எம்மைக் காத்திடவே
மானிடனாய்ப் பிறந்திடுவீர்

டிலுக்க்ஷியா ஜோயல் ஜிப்சன்
தரம் – 11
புனித மரியாள் பேராலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருகைக்காலம்

திருவருகைக்காலம் (Advent) எனும் மொழிப்பதமானது இலத்தின் மொழி 'Adventus' சொல் பதத்தை அடிப்படையாகக் கொண்டது 'வருகை' எனும் அர்த்தத்தை கொண்ட இச்சொல் கிறிஸ்து பிறப்பு நாட்களுக்கு முன் வருகின்ற நான்கு ஞாயிறு வாரங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. திருவருகைக்காலம் பொதுவாக இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இயேசுவின் வருகையை குறித்து தியானிக்க இறைமக்களை அழைக்கின்றது.

1. இயேசுவின் இரண்டாம் வருகை

2. இயேசுவின் வரலாற்று / முதல் வருகை

திருவருகைக் காலம் நான்கு வாரங்களை உள்ளடக்கியதாகும். திருத்தூதரான புனித அந்திரேயாவின் விழாவை (நவம்பர் 30) அண்மித்துள்ள ஞாயிற்றுக்கிழமையில் இருந்து டிசம்பர் 24 ஆம் திகதி வரை திருவருகைக் காலம் எனப்படுகின்றது. இக்காலப்பகுதி தவக்காலத்தைப் போன்று மனமாற்றத்தின் காலப்பகுதியாகும். ஏனெனில் இயேசு எம்மை எதிர்கொள்ள வரும் போது நாம் தூயவர்களாக இருக்க வேண்டும் என்பதையும், அகமகிழ்வின் தொனிப்பொருளிலும் கிறிஸ்து எமக்காக மீட்பராக பெத்லகேமில் பிறந்தார் என்பதையும் உணர்த்தி எம்மை தியானிக்க திருஅவை பணிக்கின்றது.

கி.பி 900 ஆம் ஆண்டு முதல் திருவருகைக் காலம் திருஅவை வழிபாட்டுக் காலத்தின் தொடக்கமாக கருதப்படுகின்றது. எனினும் திருவழிபாட்டுக் காலத்தில் இக்காலம் மிகமுக்கியமானது என எம்மால் கருத முடியாது. காரணம் எப்பொழுதும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா மாத்திரமே அதிக உயரியதும், முதன்மையானதுமாகும்.

பொதுவாக திருவருகைக்காலம் என்றாலே ஊதாநிற திருப்பலி உடைகள், பீடமுன் விரிப்புகள் என ஊதா நிறத்தில் அலங்காரங்களை காணலாம். திருவழிபாட்டில் ஊதா நிறம் மனமாற்றத்தின் அடையாளத்தை குறிக்கும். திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு மாத்திரம் ரோஸ்நிற திருப்பலி உடைகள் மற்றும் அலங்கரிப்புக்கள் பயன்படுத்தப்படும். ஏனெனில், கிறிஸ்து பிறப்பு நெருங்கி வருகின்றது. எனவே அகமகிழ்வோம் மீட்பர் வருகின்றார் என்பதை வெளிப்படுத்தவே இது பயன்படுத்தப்படுகின்றது.

பலவேளைகளில் டிசம்பர் மாதம் தொடங்கினாலே கிறிஸ்மஸ், கிறிஸ்து பிறப்பு என உலகத்தின் எல்லா இடங்களிலும் கொண்டாட்டங்களை காணக்கூடியதாக இருக்கும். கடைகளில் பண்டிகை வியாபாரங்களை தொடங்கிவிடுவர்கள். எங்கும் கரோல் கீதங்கள் இசைப்பதை கேட்போம். ஆனால் உண்மையாகவே திருவருகைக் காலம் முன் ஆயத்த காலம். இயேசுவின் உயிர்ப்பிற்கு தவக்காலம் 40 நாட்கள் முன் ஆயத்தத்தைப் போல இங்கும் திருவருகைக் காலம் நான்கு வார முன்னாயத்தமாகும்.

### திருவருகைக்காலம் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புக்கள்

1. திருஅவையின் வரலாற்றில் கிறிஸ்து பிறப்பின் முன்னாயத்தம் முதன் முதலாக கி.பி 380ல் நடைபெற்ற "சரகோசே" (Sqnod of Saragossa) எனும் பேரவையின் குறிப்பேடு எமக்கு ஆதாரத்தை விளக்குகின்றது. இதன்போது எல்லா திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களும் டிசம்பர் 17 முதல் 24 வரை ஆலயத்தில் ஒன்றுகூட வேண்டும் என கூறுகின்றது. அண்ணளவாக இவ் நாட்களின் எண்ணிக்கை எட்டு நாட்களை கொண்டதாகவும், இது முழுமையான திருவருகைக்காலம் இல்லாமையையும் காணக்கூடியதாக இருந்தது. இதனை 'ஒக்டேவ்' என்ற விசேட பெயரை கொண்டு அழைத்தனர்.

2. ஆர்லெஸ் நகர் புனித செசாரியஸ் (502 – 542) என்பவரின் மறையுரை ஒன்று முதன்முதலாக திருவருகைக் காலத்தில் பதிவேற்றப்பட்ட முதல் மறையுரையாக வரலாற்று குறிப்புகள் எமக்கு வெளிப்படுத்துகின்றன.

3. திருவருகைக் காலம் ஒரு திருவழிபாட்டுக் காலமாக முதன் முதலில் கி.பி 581ல் பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற "மாகோன்" பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. தவக்காலத்தின் திருவழிபாட்டு கொள்கைகளை இக்காலத்திலும் அதாவது நவம்பர் 11 முதல் டிசம்பர் 24 வரையுள்ள நாற்பது நாட்கள் கடைப்பிடிக்க வேண்டும் என கூறியது. இத்தகைய இணைப்பின் வெளிப்பாடு இன்றைய காலத்தில் நாம் காணும் ஊதா நிறப்பயன்பாடு உணர்த்துகின்றது.

4. திருத்தந்தை பெரிய கிரகெறி அவர்கள் ஆற்றிய திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறுதின மறையுரை ஒன்றின் பிரதியும் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. 7 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில், திருவருகைக்காலம் ஐந்து ஞாயிறு தினங்களை உள்ளடக்கி ஸ்பெயின் நாட்டில் கொண்டாடப்பட்டது.

6. 8ஆம் நூற்றாண்டில் கீழைத்தேய திருஅவையானது கடினமான ஒருத்தல்கள், நோன்பு கடைப்பிடிக்கப்பட்டு திருவருகைக்காலம் காணப்பட்டது. இத்தகைய மரபு இன்னும் அவ் திருஅவையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இங்கு சிவப்பு நிற திருப்பலி உடைகள் பயன்படுத்தப்பட்டது.

7. திருத்தந்தை 7 ஆம் கிரகெறி அவர்கள் 5 வாரங்களைக் கொண்ட திருவருகைக்காலத்தை நான்கு வாரங்களாக குறைத்து திருஅவையில் அறிமுகப்படுத்தினார்.

8. திருவருகைக்காலத்தின் 3 ஆம் ஞாயிறு "அகமகிழ்வின் ஞாயிறு" என அழைக்கப்படும். இதன் போது ரோஸ் நிற திருப்பலி ஆடைகள் அணியப்படும். இது கிறிஸ்து பிறப்பை நாம் நெருங்குகின்றோம் என்பதை நினைவு படுத்துகின்றது. இத்தகைய மரபு தவக்கால நான்காம் வார திருவழிபாட்டின் பிரதியாகும்.

9. திருவருகைக்கால வளையம் 19 ஆம் நூற்றாண்டில் திருஅவையினால் அறிமுகப் படுத்தப்பட்டது.

### திருவருகைக்கால வளையம்



## அருட்பணி . எமர்சன் றாகல்

திருவருகைக்கால வளையத்தின் தொடக்கம் ஜேர்மன் நாட்டில் 1839 ஆம் ஆண்டுக்கு செல்கின்றது. லூத்தரன் சபையைச் சேர்ந்த ஜோகான் கிள்ரிச் விக்கேன் என்பவர் சிறுவர்களுக்கான மறைபரப்புப் பணியை செய்து கொண்டிருக்கும் போது ஒரு வண்டில் சக்கரத்தை கொண்டு 20 சிறிய சிவப்பு மெழுகுவர்த்திகளும் நான்கு பெரிய வெள்ளை மெழுகுவர்த்திகளையும் ஏற்றினார். சிவப்பு நிற மெழுகுவர்த்திகள் கிழமை நாட்களிலும் வெள்ளை நிறம் ஞாயிற்றுக் கிழமைகளில் ஏற்றப்பட்டது.

மேலும் பிறவினத்தவர்களின் மரபின்படி வீடுகளில் குளிர்காலத்தில் மெழுகுவர்த்திகளை ஏற்றிவைப்பதும் பச்சை இலைகளை பறித்து வைத்து அதனை பார்த்து மகிழ்ச்சியடைவதும் வழக்கமாக வைத்திருந்தனர். ஏனெனில் வெளிப்புறத்தில் குளிர்காலத்தில் பனிமூட்டமாகவும் இலைகள் உதிர்ந்து வாழ்வுக்கு ஒரு கசப்பான எதிர்பார்ப்பையும், இருளையும் கொடுத்தது. இத்தகைய பழக்கத்தை திருஅவை புதிய இறையியல் பார்வையில் காண முயன்றது. அதன் அடிப்படையிலேயே திருவருகைக்கால வளையம் பழக்கத்திற்கு வந்தது.


இன்று நாம் பயன்படுத்துகின்ற திருவருகைக்கால வளையம் பல உருவங்களை கொண்டது.




**1. ஒளி** – கிறிஸ்துவே எம் ஒளி, எம்மை பாவத்தின் இருளில் இருந்து ஒளியின் மக்களாக அழைத்துச் செல்பவர். திருவருகைக் காலத்தின் ஒளியின் வெளிச்சம் அதிகரித்து கிறிஸ்து பிறப்பு விழாவில் பிரகாசமாக ஒளிரும் போது அது கிறிஸ்துவில் முழுமை பெறுகிறது என்பதை வெளிப்படுத்துகின்றது. 'உண்மை ஒளியானவர்' பிறந்து விட்டார் என உணர்த்துகின்றது.



**2. வளையம்** - இது அரச முடியின் அடையாளமாகும். அந்நாட்களில் ஓட்டவீரர்கள் வெற்றி பெற்றவுடன் மலர்வளையம் செய்து தலையில் சூடுவது மரபு. அதே போலவே வெற்றி வீரனாக, அரசனாக இயேசு சாவையும், பாவத்தையும் வென்றார் என்பதை உணர்த்துகின்றது இந்த வளையம். வளையத்தின் இன்னுமொரு அடையாளம் "இறைவன் முடிவற்றவர்" என்பதாகும். ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் முடிவில்லாத் தன்மையுடையவர் எனவும் எம்மை முடிவில்லா வாழ்வுக்கு அழைக்கின்றார் எனவும் உணர்த்துகின்றது.



**3. மெழுகுவர்த்திகள் -** நான்கு மெழுகுவர்த்திகள் நான்கு ஞாயிற்றுத் தினத்தையும் மத்தியில் உள்ள வெள்ளை நிற மெழுகுவர்த்தி கிறிஸ்துவையும் குறிக்கின்றது. கிறிஸ்து எம் வாழ்வின் மையம் என்பதையும் இது சுட்டிக்காட்டுகின்றது. ஊதா நிறம் மனமாற்றத்தையும் ரோஸ் நிறம் மகிழ்வையும் குறிக்கிறது.



**4. பச்சை நிற இலைகள்** - இது வாழ்வின் அடையாளமாகும். பச்சை பசேல் என இருக்கும் மரங்களை காணும் போது வாழ்வின் அர்த்தத்தை கொடுப்பது போல இவையும் இறைவன் எமக்கு வாழ்வு எனும் கொடையை அருளியுள்ளார் என்பதை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவேண்டல் ஆண்டு – 2024

**மறையுரைத் தலைப்புக்கள்**

1. இன்றைய இறைவேண்டல்.
2. திருப்பாடல்களுடன் இறைவேண்டல் செய்தல்.
3. இயேசுவின் இறைவேண்டல்.
4. கடவுளுக்குள் பயணித்தல். (புனிதர்கள், பாவிகளை மையப்படுத்திய தியானம்)
5. இறைவேண்டல் குறித்த உவமைகள்.
6. திருஅவையின் இறைவேண்டல்.
7. தூய ஆவிக்குள் இறைவேண்டல்.
8. புனித மரியா மற்றும் புனிதர்களின் இறைவேண்டல்.
9. இயேசு கற்பித்த இறைவேண்டல்.

## நம்பிக்கையின் ஆண்டு

**யூபிலி சுருக்க வரலாறு**

- கி.பி 1300 முதல் – திருத்தந்தை 08 ஆம் பொனிபஸ்
- இருவகை – பொது மற்றும் சிறப்பு யூபிலி ஆண்டுகள்
- சிறப்பு அருளின் காலம் - பாவமன்னிப்பு, பரிபூரண பலன், திருப்பயணங்கள், புனித வாயில்கள் ஊடாக நுழைதல்.
- 2000 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பின் 2000 வது ஆண்டு நிறைவு (பொது)
- 2015 ஆம் ஆண்டு இரக்கத்தின் ஆண்டு (சிறப்பு யூபிலி ஆண்டு)

**யூபிலி ஆண்டுக்கான தேவையும் ஆயத்த ஆண்டுகளும் – 2023, 2024**

- உலகமும் அவநம்பிக்கையும் (கொவிட் பெருந்தொற்று)
- தேவையில் இருப்போருக்கு நம்பிக்கையூட்டுதல்
- புதிய நம்பிக்கை ஒளியினை ஒளிர்விடச் செய்தல்
- ஆயத்த ஆண்டுகள் 2022 – 2023, 2023 – 2024
- 2022 – 2023 சங்கங்களின் ஆண்டு
- 2023 – 2024 இறைவேண்டலின் ஆண்டு

**ஆயத்த ஆண்டு – 01**

**2022 – 2023 சங்கங்களின் ஆண்டு**

- 2 ஆம் வத்திக்கான் சங்க ஏடுகளையும் அதனுடன் தொடர்புடைய இன்றுவரையிலான திருஅவையின் படிப்பினைகளை கற்றல், கற்பித்தல்.
- திருவழிபாடு – திருவழிபாட்டு ஆணைக்குழு
- திருஅவை – பொதுநிலையினர் ஆணைக்குழு
- இறைவெளிப்பாடு – திருவிவிலிய ஆணைக்குழு
- இன்றைய உலகில் திருஅவை – நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழு – கரித்தாஸ்

**ஆயத்த அண்டு – 02**

**2023 – 2024 இறைவேண்டலின் அண்டு**

- தனி மற்றும் பொது இறைவேண்டல் குறித்த சிந்தனையில் கவனத்தைச் செலுத்த அழைப்பு விடுகிறது.
- இன்று இறைவேண்டல் – மேற்கொள்ளப்பட வேண்டிய சவால்
- திருப்பாடல்களுடன் இறைவேண்டல்
- இயேசுவின் இறைவேண்டல்
- பாவிகளோடும், தூயவர்களோடும் இறைவேண்டல்
- இறைவேண்டல் குறித்த உவமைகள்
- இறைவேண்டலில் திருஅவை
- மரியாவின், தூயவர்களின் இறைவேண்டல்
- இயேசு கற்பித்த இறைவேண்டல் 'விண்ணக மந்திரம்'

**இலங்கைத் திருஅவையும் ஆயத்த ஆண்டும் – 2024**

**இரண்டும் இணைக்கப்பட்ட ஆயத்த ஆண்டு**

- தொடக்க நாள் 16.01.2024 – புனித ஜோசப்வாஸ் பெருவிழா
- தொடக்க நிகழ்வு திருப்பலி – ஆயர் தலைமையில் மறைமாவட்டப் பேராலயம்
- வழிபாட்டு ஆயத்தக் கையேடு – தேசிய மற்றும் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு
- பொது இறைவேண்டல் அட்டை
- யூபிலி பாடல்
- இல்லங்களுக்கான ஸ்ரிக்கர்
- வத்திக்கான் சங்கத்தின் பிரதான ஏடுகளின் கற்கை
- ஆலயப் பெருவிழாக்களை இறைவேண்டலை மையப்படுத்திய ஆயத்தம்
- மேய்ப்புப்பணி, பண்பாட்டுப்பணி, ஊடகப்பணி, கிறிஸ்தவ ஒன்றிப்புப்பணி

## படித்ததில் பிடித்தது



கத்தோலிக்கத் தேவாலயம்.
அதில் மிக்கேல் சம்மனசு சுரூபம்
ஒய்யாரமாய் காட்சி அளித்தது.

பசாசின் மேல் ஏறி நின்று கொண்டு...
அதன் வயிற்றில் ஈட்டியைப் பாய்ச்சியபடி...
ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருந்தார் அவர்.

தட்டுத் தடுமாறியபடி ஆலயத்தில் நுழைந்தாள் ஒரு பாட்டி.
நன்மரண சபைத் தலைவி அவள்.

சம்மனசை வணங்கி நெஞ்சுருகச் செபித்தாள்:
"மிக்கேல் ஆண்டவரே...
இந்தக் கட்டையக் கொஞ்சம் காப்பாத்துப்பா..."

### இருமை

இதைப் பார்த்தார் ஆலயப் பாதிரியார்.
பாட்டியின் பக்தியை மனதுக்குள் மெச்சினார்.
செபத்தை முடித்துப் புறப்பட்டாள்.

கிளம்பும் முன்...
பக்தியோடு மிக்கேல் அதிதூதரைத் தொட்டு வணங்கினாள்.
அதே பக்தியோடு கீழே கிடந்த பசாசையும் தொட்டுக் கும்பிட்டாள்.
ஆலயத்தை விட்டுக் கிளம்பினாள்.

இதைப் பார்த்த பாதிரியார் அதிர்ச்சியடைந்தார்.
தடுத்து நிறுத்திக் கேட்டார்:
"பாட்டி...
சம்மனசைக் கும்பிட்டாய் சரி
போகிற போக்கில் பசாசையும் கும்பிட்டுப் போகிறாயே..!
ஏன் பாட்டி..?"

தள்ளாடி நடந்தபடி சொன்னாள் அந்த 'உஷார்' பாட்டி:
'அதுவா சாமி..
எப்ப இருந்தாலும் இந்தக் கட்ட சாகத்தான் போவுது.
சொர்க்கத்துக்குப் போனா சம்மனசு பார்த்துக்கட்டும்.
நரகத்துக்குப் போனா பசாசு பார்த்துக்கட்டும்.'

**கடவுளையும் காசையும்**
**ஒரே நேரத்தில் வழிபட முடியாது.**

**முனைவர் சேவியர் அந்தோனி சே.ச**

## சிந்திக்க...



புனித நூல்களெல்லாம்
வெட்கப்பட்டன...

தனது பெயரால் நடக்கும்
போரில்...
தன் அன்புக்குரிய
குழந்தையின் அவலக்குரல்
கேட்டு...!
உங்களுக்கு
எண்ணெய் பெரிது
தங்கம் பெரிது
மதம் பெரிது
அணு ஆயுதம் பெரிது
அவளுக்கு!?

கிழிந்தாலும்
எரிந்தாலும்
அவள் பாடசாலை
கொண்டுபோகும்
அந்தப் புத்தகம்தான் பெரிது...!!

**மதம் மனிதனை மடையனாக்கும்**
**சாதி மனிதனை சாக்கடையாக்கும்**

**இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் தேடல்...

# கிறிஸ்து செய்த புதுமைகள் பற்றிய கண்ணோட்டம்



நற்செய்தி நூல்களின்படி இயேசு மக்களுக்கு அறிவித்த மையச்செய்தி இறையாட்சி அல்லது விண்ணரசு ஆகும். நற்செய்தி நூல்களில் எந்த ஓர் இடத்திலும் இயேசு இறையாட்சி என்றால் என்ன? அல்லது இறையாட்சி என்றால் இதுதான் என்று வரையறுத்துக் கூறவில்லை ஆனால் விண்ணரசு எதில் அடங்கியுள்ளது என்பதை அவர் பல கதைகள், உவமைகள், புதுமைகள் வழியாக எடுத்துக்கூறுகிறார்.

இறையாட்சியில் பங்குகொள்ள விரும்புவோர் எவ்வழியில் நடக்க வேண்டும் என்பதை புதுமைகள் வாயிலாக கற்பிக்கின்றார். கண்பார்வை இழந்தோருக்குப் பார்வை அளித்தும் முடக்குவாதமுற்றவருக்கு நடக்கும் திறனளித்தும், தொழுநோயாளருக்கும் தீயஆவியால் அவதியுற்றோருக்கும் நலமளித்தும் இயேசு பல புதுமைகளை விண்ணரசின் அடையாளமாக நிகழ்த்தி காட்டினார்.

புதுமைகளை நான்கு நற்செய்திகளில் மூவகை சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் யோவான் நற்செய்தியில் செய்மெயியோன் (semeion) என்ற கிரேக்கச்சொல் பயன்பட்டது. இச்சொல்லுக்கு அடையாளம் என்ற பொருள் உண்டு. கானாவூர் திருமணத்தில் இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றியதும் யோவான் இச்சொல்லை முதன் முறையாகப் பயன்படுத்தினார்.

மாந்திரீகத்தின் மந்திரக்கோல் அல்ல இயேசுவின் புதுமைகள் அவை உறுதியை வளர்க்கப்பவனி வந்த அவனியின் ஆச்சரியங்கள். இயேசு தம் அதிகாரத்தை நிறுவ மட்டும் புதுமைகள் செய்ய மறுப்பதாக ஒத்தமை நற்செய்தி நூல்களில் விபரிக்கப்பட்டுள்ளன. யோவான் நற்செய்தியில் தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றியது முதல் இறந்த இலாசரை உயிர்ப்பித்தது வரை ஏழு புதுமைகளில் இயேசு இவற்றை தெளிவுபடுத்துகிறார்.

### புதுமைகள் என்றால் என்ன?

கடவுள் படைத்த இயற்கைக்கு சில விதிமுறைகள் உண்டு. இந்த விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட சில நிகழ்வுகள் நடக்கும் போது அவை புதுமைகள் எனலாம். அதாவது ஒரு நிகழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணம் நம் புலன்களுக்கு அப்பாற்பட்ட சக்திகள் வழியாகவே அது நிகழ்கின்றது என நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எனவே இயேசு தம் பணிவாழ்வில் ஆற்றிய பல செயல்களுக்கு அவருடைய இறைவல்லமையே காரணம் என்பதே பொதுவான கருத்து ஆகும்.

புதுமை என்றால் என்ன? என்பதற்கு தூய அகுஸ்தினார் வரைவிலக்கணம் கூறுகின்றார். "இயற்கைக்கு மாறாக நடைபெறும் நிகழ்வு புதுமை" என்று கூறுகின்றார். உதாரணமாக:- பொதுவாக தண்ணீர் திராட்சை இரசமாவதில்லை ஆயினும் இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றினார். அது மட்டுமன்றி இயற்கையை எவராலும் கட்டுப்படுத்த முடியாது அதாவது காற்றும் கடலும் இயற்கையோடு தொடர்பானது இதனை இயேசு தன் வல்லமையால் கட்டுப்படுத்தினார். இதுவே இயற்கைக்கு மாறாக நடைபெறும் நிகழ்வாகும். இதைத் தான் புதுமைகள் என்று கூறுகின்றோம். விவிலியத்தில் பழைய ஏற்பாட்டிலும் பல புதுமைகள் நிகழ்ந்திருப்பதை நாம் வாசிக்கின்றோம் பழைய ஏற்பாட்டுப் புதுமைகளாக.

- செங்கடலை கடத்தல்
- மாசா,மெரிபாவில் நீர் கிடைத்தல்
- உணவுக்காக காடை கிடைத்தல்
- மன்னா பொழிதல்

என்பன. இவை கடவுளின் இறைபராமரிப்பை தெளிவாக எமக்குப் புலப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் நற்செய்தி நூல்களில் நிகழ்ந்துள்ள புதுமைகள் எமக்கு பழக்கமானவை. அவை,

- தண்ணீரை இரசமாக்கல்
- காற்றையும் கடலையும் அடக்குதல்
- இறந்தோரை உயிர்ப்பித்தல்
- கடல் மேல் நடத்தல்.

என்பனவாகும். இவை விண்ணரசின் அடையாளமாகவும் இறைபராமரிப்பு அத்தோடு இறைவல்லமை, திடம், சித்தம், அன்பு, இரக்கம் என்பற்றை தெளிவுபடுத்துகின்றது. ஒரு கருவியாக இறைமகன் புதுமைகள் ஊடாக விண்ணரசின் இயல்பினை அழகாக மக்களின் உள்ளங்களில் தெளிவுபடுத்தினார். இயேசு ஓர் கருவியாக இருந்து இறையாட்சியின் அடையாளங்களை மிளிரச்செய்தார். விவிலியத்தில் கூறப்பட்டுள்ளன. புதுமைகள் கி.மு 1000 முதல் கி.பி 100 வரை வாழ்ந்த விவிலிய எழுத்தாளர்கள் உலகைப்பற்றிக் கொண்டிருந்த பார்வையின் அடிப்படையில் எழுத்து வடிவம் பெற்றவை என்பதே ஆய்வாளர்களின் கணிப்பு. இந்த உலகப்பார்வை அன்றைய மக்களின் இறைநம்பிக்கை, கலாச்சாரம் போன்றவற்றின் அடிப்படையில் ஏற்பட்டது. இன்றும் பல புதுமைகள் எம் சமூகத்திலும் பங்கிலும் குடும்பத்திலும் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. அவற்றை நாம் எம் கண்கொண்டு நோக்கினால் மட்டுமே உணர முடியும்.

### நலம் தரும் நம்பிக்கை

"நம்பிக்கையே நன்மையானவை நிகழ காரணமாய் அமைகின்றன" என்று இயேசு எடுத்துரைக்கின்றார். புதுமைகள் இடம்பெறுவதற்கு நம்பிக்கை மிக அவசியம். இயேசுக்கிறிஸ்து குருடர்களுக்கு பார்வை அளித்தும், செவிடர்களை கேட்கச் செய்ததாகவும், நோயாளிகள் மற்றும் ஊனமுற்றோரை நலமாக்கியதாகவும், இறந்தோரை உயிரோடு எழுப்பியதாகவும் பைபிள் கூறுகின்றது. இயேசுவின் செயல்களை நேரில் பார்த்தவர்கள் தந்த சான்றின் அடிப்படையில் நற்செய்தி நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் வல்லமையே இந்த அற்புதங்களுக்கு காரணம் என்று பைபிள் சான்று பகர்கின்றது. ஆனால் இயேசுவோ, "உன் நம்பிக்கை உன்னை நலமாக்கிற்று" என்று வேறொரு காரணத்தை கூறுகின்றார். குணப்படுத்தும் முன்பும் "நீ என்னை நம்புகிறாயா?" என்பதை தெளிவுபடுத்திய பின்னரே இயேசு குணமளிக்கின்றார். கடவுள் என்னை குணப்படுத்துவார் என்று நம்பினால் அன்றி, எம்மால் குணம்பெற முடியாது என்பதைத்தான் கிறிஸ்துவின் புதுமைகள் தெளிவுபடுத்துகின்றது. அதாவது இங்கு சென்றால் நலம் கிடைக்கும், இப்படி செய்தால் வெற்றி கிடைக்கும், இவரிடம் போனால் நல்லது நடக்கும், என்று நாம் கொள்ளும் "நம்பிக்கையே நன்மையானவை நிகழ்வதற்குக் காரணமாய் அமைகின்றன." என இயேசு எடுத்துரைக்கின்றார். ஒருமுறை இயேசுவைத் தேடி கானானியப் பெண் ஒருவர் வந்தார். அவர் இயேசுவிடம் "ஐயா, பேய் பிடித்து கொடுமைக்குள்ளாகி இருக்கிற என் மகளை குணப்படுத்தும்" என வேண்டினார். இயேசுவோ மறுமொழியாக, "பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய் குட்டிகளுக்கு போடுவது முறையல்ல" என்று கூறி அவரை சோதித்தார். அப்பெண்ணோ, "ஆம் ஐயா, ஆனாலும் மேசையிலிருந்து விழும் துண்டுகளை நாய் குட்டிகள் தின்னுமே" என பதிலளித்தார். உடனே இயேசு "அம்மா, உமது நம்பிக்கை பெரிது நீர் விரும்பியவாரே நிகழட்டும். என்றார். அந்நேரமே அவர் மகளின் பிணி நீங்கியது.

மற்றொரு தடவை பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய ஒரு பெண் இயேசுவுக்கு பின்னால் வந்து அவரது மேலுடையின் ஓரத்தைத் தொட்டார். ஏனெனில் அப்பெண் "நான் இயேசுவின் ஆடையை தொட்டாலே நலம் பெறுவேன்" என தமக்குள் சொல்லிக்கொண்டார். இயேசு அவரை திரும்பிப்பார்த்து "மகளே துணிவோடிரு, உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" என்றார். உடனே அப்பெண் நலம் அடைந்தார்.

ஒருவருடைய நம்பிக்கை அவரை குணப்படுத்தும் என்பதை மேற்கூறிய நிகழ்வுகள் வழியாக இயேசு நமக்கு கற்றுத்தருகிறார். ஆகவே நாம் எதை நம்புகிறோமோ அதுவே நடக்கும். நன்மை நிகழும் என்று நினைத்தால் நல்லதும், தீமை நிகழும் என்று நினைத்தால் கெட்டது நடக்கும் என்பதே இயேசு தரும் போதனை. நமது நம்பிக்கைக்கு நலம் தரும் ஆற்றல் உள்ளது. கிறிஸ்துவின் ஒவ்வொரு போதனையும் அவரது இறைதன்மையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. எவற்றின் மீது நம்பிக்கை வைத்தாலும் நாம் நலம் பெற முடியும். ஆனால் நாம் நம்பிக்கை வைப்பவை அனைத்தும் குணம்தரக்கூடியவை அல்ல. எல்லாம் வல்ல ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்தால், அது வீண்போகாது. தம்மிடம் நம்பிக்கை வைக்காதவர்களின் வாழ்வில் அற்புதம் செய்ய அவர் விரும்புவதில்லை.

தொடரும்...

**04.11.2023 அன்று குருணாகல் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய பொது நிலையினர் ஆணைக்குழு கூட்டம்**



**திருகோணமலை இறையிரக்கத் திருத்தலத்தில் 15.10.2023 அன்று புதிய பங்குச்சபை உறுப்பினர்கள் பொறுப்பேற்றார்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதர்களின் பாதையில்....

கிறிஸ்துவுடன் இணைந்து தூயவராக வாழ்ந்தவர். ஏழ்மை, கீழ்ப்படிதல், ஒறுத்தல், தாழ்ச்சி போன்றவற்றை வாழ்வின் அடித்தளமாக கொண்டவர். துறவு வாழ்க்கை வழியாக இறையாட்சி பணி செய்தவர். இறைபக்தியில் சிறந்து விளங்கிய கிளாரா இத்தாலி நாட்டில் அசிசி நகரில் 1194ஆம் ஆண்டு யூலை 16ஆம் நாள் பிறந்தார். இறைவன்மீது மிகுந்த அன்பும் பற்றும் கொண்டு வாழ்ந்தார். குடும்பச் செபங்களில் ஆர்வமுடன் பங்கேற்றார். இவரது பெற்றோர் இளமைப்பருவத்தில் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். இத்தருணத்தில் அசிசி நகரில் உள்ள புனித ஜார்ஜ் ஆலயத்தில் புனித அசிசியார் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி மறையுறை நிகழ்த்தினார். அவரது மறையுரையால் ஈர்க்கப்பட்டு இறைவனுக்கு தனது கன்னிமையை அர்ப்பணம் செய்தார்.

கிளாரா உலக இன்பங்களை துறப்பதன் அடையாளமாக அவரது முடி வெட்டப்பட்டது. துறவிக்கான ஆடையைப் பெற்றுக்கொண்டார். அவரது தந்தை தேடி வந்து வீட்டிற்கு வருமாறு கட்டாயப்படுத்தினார். தான் துறவு வாழ்க்கை வாழ விரும்புவதாக தந்தையிடம் கூறினார். கிளாரா அருகில் இருந்த புனித ஆசிர்வாதப்பர் துறவு மடத்தில் சேர்க்கப்பட்டார்.

ஏழ்மை வழியாக கிறிஸ்துவின் வாழ்வை பிரதிபலித்தார். ஒறுத்தல்கள் வழியாக பாவங்களுக்கு பரிகாரம் செய்தார். இறைவார்த்தையைக் கடைப்பிடித்து வாழ்வதில் கவனம் செலுத்தினார். அசிசியார் எழுதிய இயேசுவின் சிலுவைத் துன்பம் பற்றிய செபம் வழியாக இயேசுவின் துன்பப்பாடுகளில் பங்கு கொண்டார். நற்கருணை ஆண்டவர்மீது பக்தியும் பற்றும் கொண்டார். இரவு நேரங்களில் நற்கருணை ஆராதிப்பில் அளவில்லா ஆனந்தம் அடைந்தார். கிளாரா 28 ஆண்டுகள் நோயுற்ற நிலையில் வாழ்ந்தார். நோயுற்ற நாட்களில் நற்கருணை அவரது உணவாக மாறியது. தனது இன்ப துன்பங்களை நற்கருணை ஆண்டவரிடம் அர்ப்பணம் செய்தார் தனக்கென்று வாழாமல் பிறர்கென்று வாழ்ந்து நற்பண்புகளின் மணிமகுடமாக மாறினார். இறைவனின் வாழ்வுதருகின்ற வார்த்தையை வாழ்வாக்கி நற்சான்று பகர்ந்த கிளாரா 1253ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ஆம் நாள் இறந்தார்.



### புனித கிளாரா

---

## இயேசு ஆண்டவரின் தொடுகை

நாம் ஒரு செய்தியை மக்களிடம் கொண்டு செல்ல அவர்களது கவனத்தை ஈர்க்க வேண்டும் இதற்கு ஒரு நல்ல கதை, பாடல், நகைச்சுவை கூறி மக்கள் அதை அதிசயித்து அவர்களது முழுக்கவனத்தையும் நம் பக்கம் திருப்பும் போதுதான் நம்மால் கூற வந்த செய்தியை முழுமையாக மக்கள் பெற்றுக் கொள்ள, அவர்களிடம் எடுத்துச் செல்ல நம்மால் இயலும். இயேசு எப்போதும் இந்த யுக்தியைப் பயன்படுத்தியிருக்கிறார்.

இயேசு அவரது பொதுவாழ்வை, தனது சொந்த ஊராகிய நாசரேத்தில் தொடங்கினார். நாசரேத்து மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளாது அவரைப் புறக்கணித்தனர். அதனால் இயேசு அங்கிருந்து புறப்பட்டு கப்பர்நாகூமிற்கு வந்து தனது பொதுவாழ்வின் பெரும் பகுதியை அங்குசெலவிட்டார். இயேசு கப்பர்நாகூமின் முதல் வருகையில் இயேசு ஜெபக்கூடத்தில் போதித்து அங்கு தீய ஆவி பிடித்த ஒருவனை விடுதலை செய்தார். பின்னர் சீமோனின் வீட்டிற்குச் சென்று சீமோனின் மாமியாரை காய்ச்சலில் இருந்து குணமாக்கினார். அந்நாள் மாலையிலேயே நோயாளர்களையும், பேய் பிடித்தவர்களையும் இயேசுவிடம் மக்கள் கொண்டுவர இயேசு அவர்கள் மீது தனது கைகளை வைத்து குணப்படுத்தினார். இதனால் இயேசு மக்களின் கவனத்தை ஈர்த்தார்.

சிலரது ஆண்டவர் மீதான தியானம், ஒரு பெரும் பிரச்சனைகளிலிருந்து ஆண்டவரால் விடுதலை பெற்ற அனுபவம். ஆண்டவருக்கு தங்களது முழுக்கவனத்தையும் செலுத்தும் மக்களாய் அவர்களை மாற்றுகிறது. மற்றும் சிலர் வல்லமையான மறையுரைகளைக் கேட்டு ஆண்டவரிடம் திரும்புகின்றனர். இன்னும் எத்தனையோ வழிகளில் இயேசு தமது கவனத்தை ஈர்க்கலாம்.

இந்த ஆர்வம் இயேசுவுக்கு செவிமடுக்கவும், இயேசுவோடு இருக்கவும் நம்மை தூண்டியிருக்கலாம். இந்த அனுபவங்களே தொடர்ந்து நாம் ஆண்டவரிடம் திரும்பி வர நம்மை அழைக்கின்ற உள் உணர்வுகளாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அனுபவம் நமக்கு இல்லையென்றால் இயேசு ஆண்டவரின் புதுமைகள், போதனைகள் ஏன் நம்மை ஈர்க்கவில்லை.

தேவ பிள்ளைகளே நம் ஒவ்வொருவரிலும் உடல் நெருக்கத்திற்கான ஏக்கம் இருக்கிறது. We have a longing for physical intimacy



ஆனால் மனிதர்களின் மட்டில் ஒருவருக்கொருவர் அச்சம் அதிகரித்துள்ளது. யாரும் தொடாதவண்ணம் ஒதுங்கி ஓடி விடுகிறோம்.

இன்று உலகில் பாலியல் வன்முறைகள் அதிகரித்து வருவதாலும், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் கூடி வருவதாலும் யாரும் யாரையும் தொடுவதை விரும்புவதில்லை. ஆனால் மனித தொடுதலின் Human touch என்று சொல்லுவார்களே, அந்த மனித தொடுதலின் முக்கியத்துவம் பற்றி அறிவது நல்லது.

பிறந்த சிசுக்களின் வளர்ச்சிக்கும், உடல் நலத்திற்கும் தொடுதல், தூக்கப்படுதல், தட்டிக்கொடுத்தல் அவசியமாகும். தாய் தந்தையின் அரவணைப்பும், அவர்கள் தோளில் சுமத்தல் வளரும் குழந்தைகளின் உடல் உஷ்ண பராமரிப்பிற்கும், உடலின் எதிர்ப்புச்சக்தி உயர்வதற்கும் பயன்படுகின்றது என்கின்றனர் அறிவியல் ஆய்வாளர்கள். மனிதர்களின் தொடுதல் அதிகமின்றி வளரும் குழந்தைகள் ஆர்வமற்றவர்களாகவும், சமூக விரோதிகளாகவும் மன அழுத்தமுடையவர்களாகவும், தற்கொலை எண்ணம் கொண்டவர்களாகவும் மாறுவார்கள் என்ற ஆர்வத்தையும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இயேசு ஒரு தொடுகிறவராக மக்கள் அனைவரையும் தொட்டார். தொழுநோயாளரை இயேசு தொடுவதற்கு முன் இயேசுவை தொழுநோயாளர்கள் தொட்டார்கள். அவர்கள் இயேசுவைத் தொடவும் இயேசு தங்களைத் தொடவும், ஆசீர்வதிக்கவும் விரும்பினார்கள். சமுதாயம், குடும்பத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட தொழுநோயாளர்களுக்கு உடல் சுகத்தை விட ஒதுக்கி வைக்கப்பட்டதால் ஏற்பட்ட இதய காயத்திற்கு சுகம் தேவைப்பட்டது.

நம் மத்தியில் கட்டித்தழுவுதல் நடைமுறையில் இல்லை என்றாலும், பிள்ளைகள் பெற்றோர்களின் தழுவுதலை அனுபவிப்பதும், நண்பர்களின் தழுவுதலை இளைஞர்கள் அனுபவிப்பதும் அவசியமாகும். [illegible] இழந்து தவிக்கும் நம்முடைய குடும்பத்தில் யாராவது மரித்து குடும்ப உறுப்பினர்கள் தவிக்கையில் நம்முடைய குடும்ப நண்பர்களோ, குடும்ப உறவினர்களோ அல்லது நம் குடும்பத்தில் யாராவது வெற்றி பெற்று நிற்கும் போது ஒருவரை நாம் கட்டித் தழுவி அவரோடு உடனிருப்பதையும், அவரைப் பாராட்டுவதையும் நாம் உளமார தெரிவிக்கையில் பெரிய உள்மனமாற்றத்தை அந்த நிகழ்வுகள், அவர்களை ஆறத்தழுவி பாராட்டுவது அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. அதுபோல இழந்து தவிக்கிறவர்களுக்கு ஆறுதல் கொடுக்கின்றது. நமது வார்த்தைகளை விட கை கொடுத்து வாழ்த்து தெரிவிப்பதை விட கட்டித்தழுவுதல் ஒருவரின் உள்ளக்காயங்களை குணப்படுத்தும் ஆற்றல் மிக்கது. பெரும் மனமாற்றத்தை உருவாக்கும் வல்லமையுள்ளது.

இயேசு தமது கைகளை வைத்து நோயாளர்களை குணமாக்கியது போல, தொழுநோயாளரை கட்டித்தழுவியது போல, நமது நண்பர்கள் குடும்பத்தினர்களுக்கு நமது கட்டித்தழுவுதலை இயேசுவின் பாணியில் வழங்கி நற்சுகத்தைப் பெற நாமும் அழைக்கப்படுகின்றோம்.

நோயாளர்களாய், பேய் பிடித்தவர்களாய், பிரச்சனைகளில் உள்ள மக்களையும், கடன்தொல்லையில் இருப்பவர்களாய் மனநிம்மதியில்லாமல் இருக்கின்ற நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவரின் தொடுகை கிடைக்க பிரார்த்திப்போம். திறந்த மனதோடு ஆண்டவர் மீது நம் கவனத்தை திருப்புவோம். ஆண்டவரிடம் நம் முழுக்கவனத்தையும் திருப்பி, அவருடைய செய்தியை, அவருடைய இறைவார்த்தையை கேட்டு அதன்படி வாழ்கிற மக்களாய் இருப்போம்.



மறைத்திரு. மரிய அந்தோனிராஜ்
பாளையம் கோட்டை மறைமாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித யோவான் நற்செய்தி
## 09 – 12 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 500/= 2ஆம் பரிசு 300/= 3ஆம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

1. இயேசுவின் சீடர்கள் பிறவியிலே பார்வையற்ற ஒருவரைப் பார்த்து இவர் பார்வை அற்றவராய்ப் பிறக்க காரணம் என்ன என்று கேட்டதற்கு இயேசுவின் பதில் என்ன?

விடை:..........................................................................

2. இலாசரின் சகோதரிகளின் பெயர் என்ன?

விடை:..........................................................................

3. இயேசு இலாசரை எவ்வாறு உயிர்ப்பித்தார்?

விடை:..........................................................................

4. இயேசுவைக் கொல்ல திட்டம் தீட்டியவர்கள் யார்?

விடை:..........................................................................

5. இயேசுவின் காலடிகளில் நறுமணத் தைலம் பூசியது யார்? அத் தைலயத்தின் பெயர் என்ன?

விடை:..........................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. சிலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவர் என்று பொருள் ஆகும். ( )

7. வாயில் வழியாக நுழையாதவர் ஆடுகளின் ஆயர். ( )

8. இலாசர் 04 நாட்களின் பின் உயிர்ப்பிக்கப்பட்டார். ( )

9. மக்கள் இயேசுவிற்காக குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு ஓசன்னா.... என போற்றிப் பாடினர். ( )

10. பரிசேயருள் சிலர் இயேசு ஓய்வு நாள் சட்டத்தைக் கடைப்பிடிக்காத இவர் கடவுளிடம் இருந்து வந்திருக்க முடியும் என்றனர். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. நீங்கள் தான் ____________ என் தந்தையின் பெயரால் நான் செய்யும் ____________ எனக்கு ____________

12. ஓசன்னா ____________ பெயரால் வருகின்றவர் ____________ பெறுக!

13. மகளே ____________ அஞ்சாதே! இதோ! உன் ____________ வருகிறார். ____________

14. என்னிடம் ____________ கொள்பவர் என்னிடம் மட்டுமல்ல ____________ நம்பிக்கை கொள்கிறார்.

15. ____________ நீர் இங்கே இருந்திருந்தால் என் ____________ இறந்திருக்க மாட்டார்.

பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

பங்கு :..........................................................................

முடிவுத்திகதி 10.02.2024

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி – 57
## எசாயா 10 – 14 அதிகாரங்கள்

1. இவர்களை கொள்ளைப் பொருளாய் எண்ணிச் சூறையாடுகிறார்கள்?

விடை:..........................................................................

2. தொலை நாட்டிலிருந்து அழிவாகிய இது வரும்போது என்ன ஆவீர்கள்?

விடை:..........................................................................

3. ஆணவம் நிறைந்த இவனின் சிந்தனையை முன்னிட்டும் இறுமாப்புடன் அவன் பேசிய பேச்சுகளை முன்னிட்டும் அவனை நான் தண்டிப்பேன்?

விடை:..........................................................................

4. இந்தக் குடும்பத்தாருள் எஞ்சியிருப்போர் சிலர் வலிமை மிக்க இறைவனிடம் திரும்பி வருவர்?

விடை:..........................................................................

5. பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும் அவற்றின் குட்டிகள் சேர்ந்து படுத்துக் கிடக்கும். இது மாட்டைப் போல் வைக்கோல் தின்னும்?

விடை:..........................................................................

6. யூதாவைப் பகைத்தோர் வெட்டி வீழ்த்தப்படுவர் இவர்கள் யூதாமேல் பொறாமை கொள்வதில்லை?

விடை:..........................................................................

7. ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும். இவற்றை அந்த ஆவி அவருக்கு அருளும்?

விடை:..........................................................................

8. இராமா நகரின் மக்கள் அஞ்சி நடுங்குகின்றார்கள். இவரின் நகரான இதிலிருந்து மக்கள் ஓட்டமெடுக்கின்றார்கள்?

விடை:..........................................................................

9. ஆண்டவரின் மக்களுள் எஞ்சியோர் வருவதற்கு இங்கிருந்து பெருவழி ஒன்று தோன்றும்?

விடை:..........................................................................

10. மீட்பருளும் இங்கிருந்து நீங்கள் அகமகிழ்வோடு இதை முகந்து கொள்வீர்கள்?

விடை:..........................................................................

11. இங்கு குடியிருப்போரே ஆர்ப்பரித்து அக்களியுங்கள். இவரின் தூயவர் உங்களிடையே சிறந்து விளங்குகின்றார்?

விடை:..........................................................................

12. ஆமோட்சின் மகன் இவர் பாபிலோனைக் குறித்துக் கண்ட காட்சியில் அருளப்பட்ட திருவாக்கு?

விடை:..........................................................................

13. இவர்களின் அகந்தையை அழிப்பேன். இவர்களின் இறுமாப்பை அடக்குவேன்?

விடை:..........................................................................

14. உன் இறுமாப்பும் உன் இதனின் இசையொலியும் பாதாளம் வரை தாழ்த்தப்பட்டன?

விடை:..........................................................................

15. ஏழைகளின் இவர்கள் உணவு பெறுவார்கள். இவர்கள் அச்சமின்றி இளைப்பாறுவார்கள்?

விடை:..........................................................................

பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

தரம் :..........................................................................


பங்கு :..........................................................................

முடிவுத்திகதி 10.02.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான நிறம்தீட்டுதல் கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி





- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1 ஆம் பரிசு - 500/- 2 ஆம் பரிசு - 300/- 3 ஆம் பரிசு - 200/-

பெயர் :.....................................................

முகவரி :.....................................................

தரம் :.....................................................

பங்கு :.....................................................

முடிவுத்திகதி 10.02.2024

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவுகள் – 43
## நீதிமொழிகள் ( 07 – 09 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா | யி | ற் | ப | டி | யி | ல் | | க | ம் |
| ழ் | | ல் | யோ | ணி | ம | ண் | க | ண் | ள |
| வ | து | ய் | ப் | பீ | ர் | க | ள் | டு | யோ |
| டை | | ல் | தி | த் | ள | தா | பா | கொ | ப் |
| வா | யே | தை | க | ளி | டை | யே | | ண் | ணை |
| ய் | ரா | ளோ | ள் | பு | ப் | ழி | வி | டே | ள் |
| மு | ன் | ம | தி | ய | ற் | றோ | ரே | ன் | வெ |
| அ | ன் | பு | கூ | ர் | வோ | ரு | க் | கு | |
| | | செ | வி | கொ | டு | ங் | க | ள் | |
| கா | ப் | பா | ற் | ற | ப் | ப | டு | வா | ய் |

1 ஆம் பரிசு 500/= ரூபா
டெலிஷா நெவில்ராஜ்
இல. 563, செல்வநாயகபுரம்
திருகோணமலை

2 ஆம் பரிசு 300/= ரூபா
நெவில் சீவெட்
இல. 89, அந்தோனியார் வீதி,
நித்தியபுரி, செல்வநாயகபுரம்

3 ஆம் பரிசு 300/= ரூபா
M. ரோஸ்மலர்
இல. 188/5, மாங்காயூற்று
கன்னியா





**திருமலைத்தீபம் இதழ் 84 இல் புனித யோவான் நற்செய்தி, எசாயா மற்றும் விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற தவறுகளுக்காக வருந்துகின்றோம்.**

ஆசிரியர்
திருமலைத்தீபம்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்





1 ஆம் பரிசு 500/= ரூபா
T. மியூரியன்
புளியங்குளம்
இறை இரக்கத் திருத்தலம்

2 ஆம் பரிசு 300/= ரூபா
நி. சோமிகா
இல. 70/35, யாட் அடை வீதி
திருகோணமலை
புனித மரியாள் பேராலயம்


3 ஆம் பரிசு 200/= ரூபா
S. ஜிதுஷ்கர்
இல. 93/31, நீதி மன்ற வீதி
திருகோணமலை
புனித மரியாள் பேராலயம்



## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி ~ 55
### எசாயா 01 ~ 04 அதிகாரங்கள்

1 ஆம் பரிசு 500/= ரூபா
ஜொ. லொறன்சி றன்சியா
8ம் வட்டாரம், இலுப்பைக்குளம்
சாம்பல்தீவு
திருச்சிலுவைமலை ஆலயம்

2 ஆம் பரிசு 300/= ரூபா
செ. ஹரினிஷா
இல. 29, 1ம் ஒழுங்கை, புளியங்குளம்
திருகோணமலை
இறை இரக்கத் திருத்தலம்



3 ஆம் பரிசு 200/= ரூபா
நெவில்ராஜ் டனிற் ஷரோன்
இல. 563, செல்வநாயகபுரம்
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்

## புனித யோவான் நற்செய்தி
### அதிகாரங்கள் 01 – 04

1 ஆம் பரிசு 500/= ரூபா
அமலதாசன் ஜெர்லின்
இல. 34 B, மயான வீதி, அன்புவழிபுரம்
புனித சதாசகாய அன்னை ஆலயம்



2 ஆம் பரிசு 300/= ரூபா
கே. லீவோன்
பொற்கேணி, தம்பலகமம்
புனித பற்றிமா அன்னை ஆலயம்

3 ஆம் பரிசு 200/= ரூபா
ம. கஃபினா
இல. 70/35, யாட் அப்ரோஜ் வீதி
திருகோணமலை
புனித மரியாள் பேராலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குகளுக்கிடையிலான கரோல் பாடல் போட்டி




லூர்து அன்னை திருத்தலம் – பாலையூற்று




புனித சதா சகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம்




குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை



புனித யூதாததேயு ஆலயம்– இலிங்கநகர்



இறைஇரக்கத் திருத்தலம் – அலஸ்தோட்டம்



புனித சூசையப்பர் ஆலயம் – நிலாவெளி



புனித திருமுழுக்கு யோவான் ஆலயம்
சாம்பல்தீவு



புனித வனத்து அந்தோனியார் ஆலயம்
செல்வநாயகபுரம்



குவாடலூப்பே அன்னை திருத்தலம்
திருகோணமலை



புனித அந்தோனியார் ஆலயம் – மூதூர்




புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம்
[illegible]




புனித செபமாலை அன்னை ஆலயம்
குச்சவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org